# எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு காடுகள் வளர்ப்பின் அவசியத்தை வில்லுப்பாட்டு கலையின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி மேம்படுத்துதல்.

செயலாய்வு

இச்செயலாராய்ச்சியானது மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது


ஆய்வாளர்

**க.இராமர்,** எம்.எஸ்.சி., எம்.எட்., எம்.பில்.,

விரிவுரையாளர்


2023-2024


மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

மஞ்சூர் - 623527

இராமநாதபுரம் மாவட்டம்

# நன்றியுரை

இச்செயலாய்வினை செய்ய வாய்ப்பு வழங்கிய மாநில கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இயக்குநர் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றியை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாய்வினை தொடர அனுமதி அளித்த மஞ்சூர் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனர் முதல்வர் **முனைவர். திரு.பெ.நடராஜன்** அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். மேலும் ஆய்வு சிறப்புர அமைய துணை நின்ற எமது நிறுவனத்தின் அனைத்து முதுநிலை விரிவுரையாளர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் என் உளமார நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த ஆய்வுக்கு சிறப்பாக செய்திட ஒத்துழைப்பு நல்கிய இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி கல்வி மாவட்டம், மேலாய்குடியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியருக்கும், சக ஆசிரியர்களுக்கும், அலுவலக நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும், நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**க.இராமர்**

# உறுதிமொழி

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி கல்வி மாவட்டம், மேலாய்குடியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில், **எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு காடுகளை வளர்ப்பின் அவசியத்தை வில்லுப்பாட்டு கலையின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி மேம்படுத்துதல்,** என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது, இந்த செயலாய்வு அறிக்கை என்னால் தன்னிச்சையாக உருவாக்கப்பட்டது. இச்செயலாய்வு அறிக்கை இதற்கு முன் எவரும் சமர்பிக்கவில்லை எனவும் உறுதியளிக்கிறேன்.

**க.இராமர், எம்.எஸ்.சி., எம்.எட்., எம்.பில்.,**
**விரிவுரையாளர்**
**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**மஞ்சூர் - 623707,**
**இராமநாதபுரம் மாவட்டம்**

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
| --- | --- | --- |
| 1 | அறிமுகம்- ஆராய்ச்சி | 1 |
| 2. | செயல் ஆராய்ச்சி | 2 |
| 3. | நாட்டுப்புற பாடல் | 3 |
| 4. | வில்லுப்பாட்டு | 4 |
| 5. | பிரச்சனையை அடையாளர் காணுதல் | 6 |
| 6. | பிரச்சனையை வரையரை செய்தல் | 8 |
| 7. | ஆய்வின் தேவையும் முக்கியத்துவமும் | 8 |
| 8. | ஆய்வின் நோக்கங்கள் | 9 |
| 9. | உத்தேசக் காரணங்கள் | 10 |
| 10. | உத்தேச தீர்வுகள் | 11 |
| 11. | கருதுகோள்கள் ஆய்வியல் | 12 |
| 12. | செயல்பாடுகள் | 15 |
| 13. | ஆய்வின் பகுப்பாய்வு | 21 |
| 14. | ஆய்வின் முடிவுகள் | 29 |

# செயல் ஆய்வு (2023 -24)

## செயல் ஆராய்ச்சியின் தலைப்பு

எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு காடுகள் வளர்ப்பின் அவசியத்தை வில்லுப்பாட்டு கலையின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி மேம்படுத்துதல்.

## அறிமுகம்

## ஆராய்ச்சி

ஆராய்ச்சி என்பது உண்மைகளை தேடுதலை மட்டும் குறிக்கிறது. பிரச்சனைகளுக்கான வினாக்களுக்கும் தீர்வுகளுக்கும் விடை களையும் அளிக்க செய்யும் ஒரு செயல்முறை ஆகும்.ஒழுங்கமைக்கப்பட்ட பிரச்சனைகளை சந்தேகத்திற்கு இடமின்றி உண்மைகளை தெளிவுபடுத்துவதற்கும், தவறான கருத்துக்களை சரி செய்வதற்கும் விவரிக்க முடியாத விளக்கங்களுக்கு, விளக்கங்களை அளிக்கவும் இது உதவுகிறது.

ஆராய்ச்சி என்பது விஞ்ஞான ரீதியாக முயற்சியாகும். விஞ்ஞான முறை என்பது பகுத்தறிவின் தர்க்க ரீதியான நிகழ்வு முறைகளை பின்பற்றி திட்டமிடப்பட்ட படிப்படியான செயல் முறையை ஆராய்ச்சியாகும் ஆராய்ச்சி என்பது ஓர் ஆராய்ச்சி திட்டத்தின் அல்லது ஆய்வின் ஒரு பகுதியாக திட்டமிடப்பட்ட அவதானிப்புகள் அல்லது தரவு சான்றுகள் அல்லது தகவல்களை பெறுவதில் பயன்படுத்தப்படும் செயல் முறையை குறிக்கிறது.

ஆராய்ச்சியின் செயல்பாடு என்ன, எப்படி முன்னேறுவது, முன்னேற்றத்தை எப்படி அளவிட வேண்டும், எது வெற்றி என்பதை வரையறுக்கிறது .

## செயல் ஆராய்ச்சி

செயல் ஆராய்ச்சி என்பது கற்றல் கற்பித்தல் முறையில் வரும் சிக்கல்களுக்கு எதார்த்தமான தீர்வுகளை கண்டறிய முயற்சிக்கும் ஒரு அறிவியல் யுத்தியாகும் இது பயன்பாட்டு ஆராய்ச்சி போன்றது. செயல் ஆராய்ச்சி என்பது கற்பித்தல் செயல்பாடுகளில் செயல்களை குறிக்கிறது. முதலில் ஒரு சிக்கலை அடையாளம் காணப்பட்டு பின்னர் அதை தீர்க்கும் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது .பிறகு எவ்வளவு சிறப்பாக செயல்பட்டது என்பதனை அளவிடலாம் முடிவுகள் திருப்திகரமாக இல்லை என்றால் படிகளை மீண்டும் பயன்படுத்தலாம் .

செயல் ஆராய்ச்சி என்பது வகுப்பறை சூழ்நிலையில் வகுப்பறை சிக்கல்களை கண்டறிய ஆசிரியர்களால் நடைமுறைப் படுத்தப்படும் முறைசாரா ஆராய்ச்சி ஆகும்.

செயல் ஆராய்ச்சி என்பது ஒருவரின் சொந்த கற்பித்தல் பாணிகளை படிக்க பயன்படுகிறது. கற்பித்தல் கற்றலுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இந்த செயல் ஆராய்ச்சியின் செயல்பாடுகள் செயல் ஆராய்ச்சி என்பது கல்வியின் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயல் முறையாகும். செயலாட்சி என்பது ஆசிரியர்கள் தங்கள் சொந்த கற்பித்தல் நடைமுறைகளை மேம்படுத்த ஒன்றாக வேலை செய்வதே உள்ளடக்கியது.

செயல் ஆராய்ச்சி எதார்த்தமானது அல்லது நடைமுறையானது மற்றும் வகுப்பறை பயிற்சிக்கு பொருந்தும் இது ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை நேரடியாக அணுக அனுமதிக்கிறது .

செயலாராய்ச்சி என்பது ஒருவரின் சொந்த கற்பித்தல் அல்லது நடைமுறையை பற்றிய பிரதிபலிப்பு மூலம் விமர்சனப் புரிதலை வளர்ப்பது ஆகும்.

மாணவர்கள் வகுப்பறைகளில் பல்வேறு வழிகளில் பாடங்களை கற்றுக் கொள்கிறார்கள். ஆசிரியர் கற்பித்தலின் மூலமாக, கணிப்பொறியின் மூலமாக ,மெய் நிகர் வகுப்பறையின் மூலமாக, இணையத்தின் மூலமாக ஆடல், பாடல், கதை, விளையாட்டு ,

குழு விளையாட்டு போன்ற பல்வேறு முறைகளில் மாணவர்கள் கல்வியை கற்றுக் கொள்கிறார்கள். தாங்கள் அன்றாட வாழ்வில் காணும் விளையாட்டு மற்றும் கலைகளின் மூலமாகவும் மாணவர்கள் பல்வேறு செய்திகளையும் , பள்ளியில் படிக்கும் பாடங்களை நடைமுறை வாழ்க்கையோடும் பொருத்திப் பார்த்தும், விழுமிய கல்வியும் கற்றுக் கொள்கிறார்கள்.

தாங்கள் பகுதியில் காணும் பெரியோர்களிடமிருந்தும் உறவினிடமிருந்தும் பல்வேறு கலைகளை கற்றுக் கொள்கிறார்கள். ஒவ்வொரு கலையின் மீதும் ஒவ்வொரு மாணவர்கள் ஒன்றிணைந்து மனதோடு மனதாக இணைந்து விருப்பம் கொள்கிறார்கள்.

அதன் வழியே ஒவ்வொரு பாடத்தையும் கற்பனை செய்து கற்றுக் கொள்ள நினைக்கிறார்கள். அவ்வாறு எண்ணுகையில் பல்வேறு நாட்டுப்புற கலைகளையும், பாடல்களையும் கண்டு வியப்புகிறார்கள் அவர்களுக்கு இந்த சிந்தனையை தூண்டு விதமாக இந்த ஆய்வு நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றாக உள்ள வில்லுப்பாட்டு கலையினை இன்றைய மாணவர்கள் எவ்வாறு அறிந்துள்ளார்கள் என்பதனை அறியும் பொருட்டு இந்த ஆய்வு வில்லுப்பாட்டு கலையினை இன்றைய மாணவர்கள் அறிந்து உள்ளார்களா... என்பதனை அறியவும் வேறு ஏதேனும் சிறப்புத்திறன் பெற்றுள்ளார்களா என்பதனையும் தான் மனதில் நினைக்கின்ற வரிகளை இணைத்து பாடலாக அமைக்கும் திறனையும் கவிதை வடிக்கும் திறனையும் அறியும் பொருட்டு இந்த ஆய்வு தொடங்குகிறது.

## நாட்டுப்புற பாடல்

நாட்டார் பாடல் அல்லது நாட்டுப்புறப் பாடல் எனப்படுவது நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாட வாழ்விலும், தொழிற்களங்களிலும், பணி நேரங்களிலும், களைப்பை குறைக்கும் வகையிலும் விழாக்களிலும் பாடும் பாடலை குறிக்கும்.

நாட்டுப்புற இலக்கியத்தின் வேர்கள் மனித சமுதாயத்தின் மிக ஆழமாக பதிந்துள்ளன நாட்டுப்புற இலக்கியமானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ அதை கற்றதோ அதை குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அரையாகும் எனவே நாட்டுப்புற இலக்கியம் மண்ணின் மனதை பரப்பும் சிறப்பினை கொண்டது நாட்டுப்புற இலக்கியம் என்ற வகை அமைப்பாட்டிற்கு பல வகையினை காண முடியும்.

அவை நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புறக் கதைகள் நாட்டுப்புற கதைப்பாடல்கள் நாட்டுப்புற பழமொழிகள் விடுகதைகள் புராணங்கள் முதலிலேயே ஆகும்.

நமக்கு தமிழில் கிடைக்கும் மிக தொன்மையான எழுத்துச் சான்று தொல்காப்பியரின் தொல்காப்பியமாகும் தொல்காப்பியர் வாய்மொழி இலக்கியங்களுக்கும் இலக்கணம் கூறியுள்ளார் தொல்காப்பியர் கூறுவது நாட்டுப்புற பாடல்களை என்று அறிஞர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள் வேறு சிலர் தொல்காப்பியர் சுற்றும் புலன் என்பதையே நாட்டுப்புறப் பாடல்களை குறிக்கும் என்பார்கள் நாட்டுப்புறப் பாடல்கள் இசை பாடல்களை பண்ணத்தி என்னும் இசை குறைந்து பிற பாடல்களை புலன் என்றும் கருது போக்கு காணப்படுகிறது.

## வில்லுப்பாட்டு

வில்லுப்பாட்டு அல்லது வில்லிசை என்பது தென் தமிழ்நாட்டின் நாட்டுப்புற கலைகளில் தனி சிறப்புடன் திகழும் தமிழர் கலை வடிவங்களில் ஒன்றாகும். வில்லின் துணைகொண்டு பாடப்படும் பாட்டு வில்லுப்பாட்டு என பெயர் பெற்றது. துணை இசைக்கருவிகள் பல இருப்பினும் வில்லே இங்கு முதன்மை பெறுகிறது.வில் போன்ற இசைக்கருவியின் வடிவத்தால் பெயர் கொண்டது வில்லுப்பாட்டு எனவும் கதைப்பாடல் வடிவமாகும் தமிழகத்தின் தென் பகுதியில் குறிப்பாக குமரி நெல்லை மாவட்டங்கள் செல்வாக்கு பெற்றுள்ள கலையை வில்லிசை பாடல் என்றும் வில்லடி சாங் பாட்டு என்றும் வழங்குவார் பில்லடிச் சான் கோவிலிலே விளக்கு வைக்க நேரமில்லை என்னும் நாட்டுப்புறப் பாடல் வில்லுப்பாட்டுக்கும் கோவிலுக்கும் உள்ள தொடர்பை

வெளிப்படுத்தும் இப்பாடல் வடிவமானது கதை கூறல் முறையில் இன்றும் மக்களிடையே குறிப்பாக தென் மாவட்ட மக்களிடையே செல்வாக்குடன் விளங்குகிறது.

நாடகத் தன்மையுடன் கதை கூறிச் செல்லும் முறைமைக்கு கதை கூற்றாங்கு என்று பெயர் வில்லுப்பாட்டு முழுக்க வடிவத்துக்கான கூறுகளை கொண்டு விளங்குகிறது கதை கூற்றாங்கில் ஒரு கதையின் பல்வேறு பாத்திர படைப்புகளின் இயல்புகளையும் மிகச் சிறப்பாக முக பாவனைகளுடன் குறிப்பிட்ட குழுவினர் நடித்துக் காட்டும் பாங்கு பார்வையாளரை மிகவும் ஈர்க்கும் வண்ணம் அமைந்து நிற்கும் இக்களையானது தென் மாவட்டங்களில் அம்மன் கோவில் விழாக்களிலும் கொடை விழாக்களிலும் இப்பொழுதும் நடத்தப்பட்டு வருகிறது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இடம்பெறுகிறது.

இசைக்கருவிகள் வில்லுப்பாட்டு கலையின் வில் என்னும் இசைக்கருவி முதன்மை பெறுவதில் இருந்து இசையின் பங்களிப்பின் முக்கியத்துவம் நமக்கு புரியும் இதனாலே வில்லிசை என்னும் பெயர் பெற்ற அமைகிறது . வில் உடுக்கை குடம் தாளம் கட்டை ஆகிய முக்கிய இசைக்கருவிகள் வில்லுப்பாட்டுடன் இடம்பெறும் வில்லுப்பாட்டின் முதன்மை கருவியாகிய வில்லினை தயாரிக்க பில் கதிர் முனை குப்பிகள் வடம் மணிகள் மணிகளை கோர்த்திட தேவையான வளையங்கள் கம்பிகள் கயிறுகள் முதலாகும் வில் கதிர் பனை மரத்தால் செய்யப்பட்ட வில் வடிவ பகுதி வடம் முறுக்கப்பட்ட கயிறு முனை குப்பிகள் வில்லின் இரு பக்கங்களிலும் பொருத்தப்படும் அழகிய சிமிழ் போன்ற அமைப்பு பனையின் வைரம் பாய்ந்த அடி மரப்பகுதியில் இன்றும் செதுக்கி உருவாக்கப்படும் வில் பகுதியில் உடற்பகுதி கயிற்றால் வரிந்து கட் சுற்றப்படும் மணிகளை கோர்க்க தேவைப்படும் வளையங்கள் உரிய இடைவெளி விட்டு கதிரில் பொருத்தப்பட்டு இருக்கும் கதறி நடுப்பக்கம் குடத்துடன் சேர்ந்து கட்டப்பெறும் குடம் மண் குடமாதல் கதிர் நடிப்பகுதி துணியால் சுற்றப்பட்டு இருக்கும் பில் குடத்துடன் ஒட்டி இருக்கும் நிலையில் நான் வடம் மலைகவும் கதிர் பகுதி கீழாகவும் அமைந்திருக்கும் கதிரின் மேற்பகுதி வெண்கல குப்பிகள் பொருத்தப்பட்டு இருக்கும் இரு முனைகளும் இணைக்கும் நான் மூலம் இழுத்து கட்ட பெறும் கதிரில் தொங்க விடப்படும் மணிகள் வெவ்வேறு ஒலி அமைப்பை கொண்டவை ஆகும் மணிகள் கதிரின் ஒரு பக்கம் ஆறும் மறுபக்கம் ஐந்து மாத

பதினொன்று என அமைக்கப்பட்டிருக்கும் ஒற்றைப்படையில் மணிகளை அமைப்பது பொதுவாக மரபாகும்.

### பிரச்சனையை அடையாளம் காணுதல்

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் விரிவுரையாளராக பள்ளிப் பார்வையின் பொழுது வகுப்பறை பாட நூல்களோடு மாணவர்கள் இன்னும் பல திறமைகளை தன்னகத்தே வைத்துள்ளார்கள் என்பதனை அறிய முடிந்தது .

ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு திறனின் மீது ஆர்வம் உள்ளதையும், எதார்த்தமான வகுப்பறையை கடந்து மாணவர்கள் கதை சொல்வதிலும், பாடல்களை பாடுவதிலும், விளையாட்டின் முறையில் கற்றுக் கொள்வதிலும், ஆர்வமாக இருந்ததை அறிந்து கொள்ள முடிந்தது.

ஒரு சில மாணவர்கள் அந்த ஊர் கிராமத்தில் உள்ள பெரியவர்கள் போல பாடல்களை ஒன்றிணைத்து பாடும் திறன் வல்லவராக இருப்பதையும் அறிய முடிந்தது .பாட நூற்களில் படிக்கும் பாடங்களையும் தன் கேட்ட செய்திகளையும் தனக்கு உரித்தான பாணியில் வரிகளாக அமைத்து பாடும் திறனை கண்ட பொழுது வியப்பு குறியாதாக இருந்தது.மாணவர்களின் இத்தகைய திறனை அறியும் பொருட்டு , இந்த ஆய்வு தொடங்கியது. வகுப்பறையில் ஆசிரியர் குறிப்பாக அறிவியல் பாடத்தை நடத்தப்படும் பொழுது அச்சொற்களைப் புரிந்து கொள்வதில் மிகவும் கடினமாக உணர்ந்தார்கள்.

காடுகளைப் பற்றிய ஆசிரியரின் விளக்கமும் மழை நீரின் அவசியத்தையும், தாவரங்களைப் பற்றிய குறிப்புகளையும் நடத்தப்படும் பொழுது மாணவர்கள் சிரமத்தோடு இருந்ததை காண முடிந்தது .

ஆனால் இதை பாடலாக அமைத்து அவர்கள் பாடிய விதம் சிறப்பாக இருந்தது. மாணவர்கள் பாடல்களின் பாடிய விதம் ஏதோ ஒரு பாட்டின் சாயலை போன்று ஒத்து இருந்தது .தொடக்கம் வில்லு பாடலுக்கு ஒளிந்திருக்கும் ஒரு உணர்வை தந்தது.

அவ்வகையில் ஆராயும் பொருட்டே இந்த ஆய்வு வில்லுப்பாட்டு கலையினை மாணவர்கள் அறிந்துள்ளார்களா? எவ்வாறு உணர்ந்துள்ளார்கள், எவ்வளவு பேருக்கு அந்த திறமை உள்ளது என்பதனை அறியவே ஆவல் கொண்டு ,இந்த ஆய்வு தொடங்குகிறது. மாணவர்களுக்கு பாடல்களின் வழியாக இவ்வாறு கற்றுக் கொள்கிறார்கள் பாடல்களின் மீது எவ்வளவு ஆர்வம் உள்ளது எத்தனை மாணவர்கள் கலையின் மீது ஆர்வம் உள்ளார்கள் என்பதனை அறியும் பொருட்டு பல்வேறு நிலைகளில் திறமை இருந்தாலும் காடுகளை வளர்ப்பதின் அவசியத்தையும் காடுகளின் முக்கியத்துவத்தையும் ஒரு கருப்பொருளாக கொடுத்து வில்லுப்பாட்டினை அமைக்க கூறிய போட்டி மனப்பான்மையை உருவாக்கி, ஒவ்வொரு மாணவனையும் குழுவாக பங்கேற்க செய்வது தான் இந்த ஆய்வினுடைய தொடக்கம். அறிவியல் பாடத்தினை மாணவர்கள் கற்றுக் கொள்வதையும், பாடத்தினுடைய முக்கியத்துவத்தையும் அன்றாட வாழ்க்கையோடு பொருத்திப் பார்க்கும் தன்மையும் குறைவாக இருந்ததை பார்க்க முடிந்தது .அழிந்து வரும் ஒரு கலையின் வழியாக மாணவர்களை ஆர்வமூட்டி வில்லுப்பாட்டினை அறிமுகப்படுத்தியும் பாடலுக்கான கருப்பொருளை தேடும் பொருட்டு பாடலை அமைக்கவும் ஒரு போட்டி மனப்பான்மையை உருவாக்கி பாடத்தின் செய்தியையும் வாழ்வின் விழுமியங்களையும் கற்றுக் கொள்ள இது அமைந்தது.

பல்வேறு கலைகளின் மீது மாணவர்களின் ஆர்வம் குறைந்து வருவதின் காரணம் என்ன. சினிமாவின் மீது அவர்களுக்கு அதீத ஆர்வம் ஏற்படுவது ஏன்?

பாடத்தோடு ஏன் அவர்களுடைய தனித்திறனை இணைத்து கற்றுக் கொள்வதில்லை.இயற்கை வளங்களின் மீது ஏன் அவர்களுக்கு அன்பு செலுத்த இயலவில்லை.

## பிரச்சனையை வரையறை செய்தல்

அறிவியல் பாடத்தில் காடுகள் வளர்ப்பின் அவசியத்தையும் காடுகளினால் மனிதன் பெரும் நன்மைகளையும் அறிந்து கொண்டும் வார்த்தைகளை சேகரித்தும், அழிந்து வரும் கலைகளின் ஒன்றான மாணவர்களின் ஆர்வ குறைந்த ,கலைகளில் ஒன்றாக இருக்கும் வில்லுப்பாட்டினை பற்றி தெரிந்து கொண்டும், குழுக்களாக ஒன்றிணைந்து பாடல்களை அமைக்கும் செயல்பாடுகளை அமைத்து வில்லுப்பாட்டு கலையினை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தனக்கு உண்டான திறமையை வெளிப்படுத்த வாய்ப்பை ஏற்படுத்துதல்.

மாணவர்களின் தனித்திறமை ஏன் வெளிப்படுவதில்லை. மாணவர்களின் திறமைக்காக அங்கீகாரம் எண் கிடைக்கப்படவில்லை நாட்டுப்புற பகுதியில் உள்ள பாடல்கள் கதைகளுக்கு ஏன் மாணவர்கள் ஆர்வம் செலுத்தவில்லை அதன் வழியாக ஏன் விழுமியங்களை பெற முடியவில்லை.

பல்வேறு கலைகளைப் பற்றி ஏன் மாணவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. நாட்டுப்புற கலைகளைப் பற்றியும் நாட்டுப்புற கதைகளை பற்றியும் அறிந்துகொள்ள ஆர்வம் கொள்ளவில்லை. படிக்கும் பாடத்தை கலைகளோடு இணைத்து படிக்கும் தன்மையை ஏன் அறிந்து கொள்ளவில்லை. குறிப்பாக வில்லுப்பாட்டு கலையினை பற்றி ஏன் மாணவர்கள் அறிந்து கொள்ளவில்லை. காடுகளைப் பற்றியும் காடுகளின் வகைகளைப் பற்றியும், காடுகளின் முக்கியத்துவத்தையும் உயிரோட்டமாக எண்ணுவது இல்லை.

## ஆய்வின் தேவையும் முக்கியத்துவமும்

ஏட்டுக்கல்வி ஒன்றே வாழ்வின் பயன் தராது தனது தனி திறமைகளையும் வளர்த்துக் கொள்ள மாணவர்கள் தன்னை தயார்படுத்த வேண்டும் அதற்கான வாய்ப்பு வரும் பொழுது சரியாக பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும் எந்த ஒரு நிகழ்வையும்

வரிகளோடு ஒட்டி தமக்குத் தெரிந்த கற்பனைகளை புகுத்தி பாடல்களைப் பாடும் திறனை மாணவர்கள் பெற வேண்டும்.

பல்வேறு நாட்டுப்புற கலைகளில் வில்லுப்பாட்டும் ஒரு கலை தான் என்பதை மாணவர்களை அறிய செய்தல். வில்லுப்பாட்டுகளை அனைவராலும் பாட முடியும் என்ற தன்னம்பிக்கையை உருவாக்குதல். தமக்குத் தெரிந்த வார்த்தைகளைக் கொண்டு வரிகளை உருவாக்கி பாடல்களைப் பாடும் திறனை வளர்த்தல்.அறிவியல் மனப்பான்மையை வளர்த்தல் .அறிவியலில் காடுகளின் அவசியத்தையும் காடுகளினால் மனிதன் பெரும் நன்மையையும் அறியச் செய்தல்.

காடுகள் பற்றிய செய்திகளைத் தெரிந்த மாணவர்கள் ,அவர்களே சொற்களை அமைத்து வில்லுப்பாட்டின் மூலமாக பாடல்களை உருவாக்க செய்தல். நாட்டுப்புற பாடல்களில் வில்லுப்பாட்டு கலையின் அவசியத்தை உணரச் செய்து, அவர்களின் திறமைகளை இணைத்து பயன்பெறச் செய்தல்.

## ஆய்வின் நோக்கங்கள்

- காடுகளின் அவசியத்தை உணர செய்தல்.
- காடுகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- மரங்களின் முக்கியத்துவத்தை அறிய செய்தல்.
- வில்லுப்பாட்டை பற்றிய அறியச் செய்தல்.
- வில்லுப்பாட்டின் அவசியத்தை அறியச் செய்தல்.
- தகவல்களை திரட்டி வில்லுப்பாட்டாக பாடும் திறனை அறியச் செய்தல்.
- மாணவர்கள் பல்வேறு கலைகளை பற்றியும், வில்லுப்பாட்டினை பற்றியும் அறியச் செய்தல் .
- மாணவர்களின் சமூக பொறுப்பை உணர செய்தல்.
- பல்வேறு நாட்டுப்புற கலைகளில் வில்லுப்பாட்டும் ஒரு கலை தான் என்பதை மாணவர்களை அறிய செய்தல்.

- வில்லுப்பாட்டுகளை அனைவராலும் பாட முடியும் என்ற தன்னம்பிக்கையை உருவாக்குதல். தமக்குத் தெரிந்த வார்த்தைகளைக் கொண்டு வரிகளை உருவாக்கி பாடல்களைப் பாடும் திறனை வளர்த்தல்.
- அறிவியல் மனப்பான்மையை வளர்த்தல் .
- அறிவியலில் காடுகளின் அவசியத்தையும் காடுகளினால் மனிதன் பெரும் நன்மையையும் அறியச் செய்தல்.
- காடுகள் பற்றிய செய்திகளைத் தெரிந்த மாணவர்கள் ,அவர்களே சொற்களை அமைத்து வில்லுப்பாட்டின் மூலமாக பாடல்களை உருவாக்க செய்தல்.
- நாட்டுப்புற பாடல்களில் வில்லுப்பாட்டு கலையின் அவசியத்தை உணரச் செய்து, அவர்களின் திறமைகளை இணைத்து பயன்பெறச் செய்தல்.

## உத்தேசக் காரணங்கள்

- மாணவர்களுக்கு தனது தனித்திறமைகளை வெளிப்படுத்தும் கலையின் மீது ஆர்வம் இல்லை .
- மனன கல்வியின் மீதும் புரிதல் இல்லாமல் மாணவர்கள் கற்றல் நிகழ்வில் சிரமப்படுகிறார்கள். தனது தனித்திறன் திறன்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக் கொள்வதில்லை.
- நாட்டுப்புற கலைகளையும் நாட்டுப்புற பாடல்களைப் பற்றியும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.
- மாணவர்களுக்கு விழுமிய கல்வியை கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளது.
- மாணவர்கள் தமது வீட்டின் பெரியவர்கள் முதியவர்களை சந்திப்பது மிகவும் குறைவாக உள்ளது அவர்களின் ஆலோசனைகளை பெறுவதும் மிக குறைவு.

மாணவர்கள் தன் படிக்கிற பாடத்தை தனக்கு தெரிந்த தனித்திறமைகளோடு இணைத்து வெளிப்படுத்தும் திறனை பெறவில்லை.

மாணவர்கள் விலங்குகளையும் தாவரங்களையும் தமக்கு உரியது அவர்களுக்கென்று உயிர் உள்ளது என்று புரிதல் இன்மையில் உள்ளார்கள்.

சினிமாவை தவிர மாணவர்களுக்கு வேறொரு செயலின் மீது பெரிய நாட்டம் இல்லை.

பெற்றோர்களும் மாணவர்கள் பாட நூல்களைக் கடந்து குழந்தைகளின் தனித்திறமைக்கு வாய்ப்பு வழங்குவதில்லை.

பெற்றோர்களும் மாணவர்களும் உரையாடுகிற இடம் மிகக் குறைவு.

மாணவர்களுக்கு கிராமப்புறங்களில் பார்க்கும் தனக்கு விருப்பமான திறனை வெளிப்படுத்த சரியான வாய்ப்பு அமையாமல் இருக்கிறது.

## உத்தேச தீர்வுகள்

மாணவர்களுக்கு தனது தனித்திறமையை வெளிப்படுத்த ஆர்வம் கொள்கிறார்கள். மனன கல்வி இல்லாமல் மாணவர்கள் பாடத்தை புரிந்து கற்று தனக்கு உரித்தான மொழிகளில் வெளிப்படுத்துகிறார்கள்.

குறிப்பாக பாடலாகவோ, கதையாகவோ, தமது கற்பனைகளை வெளிப்படுத்தத், திறனை மற்றவர்கள் அறியும் வகையில் திறனை பெறுகிறார்கள். மாணவர்களுக்கு நாட்டுப்புற கலைகளை பற்றியும், நாட்டுப்புற கலைகளின் வகைகள் பற்றியும், குறிப்பாக நாட்டுப்புற பாடல்களை அவர்கள் எளிதாக அடையாளம் காணுகிறார்கள். நாட்டுப்புற பாடலுக்கும் மற்றொரு பாடலுக்கும் உள்ள வேறுபாடு அறிந்து கொள்கிறார்கள். தமக்குத் தெரிந்த வார்த்தைகளை கொண்டு பாடல் வரிகளாக உருவாக்கவும், பாடல்களை பாடவும், அறிந்து கொள்கிறார்கள்.

மாணவர்கள் குழுக்களாக அமர்ந்து குழுவின் ஒத்துழைப்போடு தன் குழு வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்போடு அவர்கள் செயல்படுகிறார்கள்.

பாடல்களைப் பாட தமது அருகாமையில் உள்ள பெரியோர்களிடம் பாடலைக் குறித்து கொடுத்து உரையாடலும் நிகழ்த்துகிறார்கள். மாணவர்கள் விலங்குகள் மற்றும் தாவரங்களை நேசிக்க கற்றுக் கொள்கிறார்கள்.அவர்களின் தன்மையிலும் பண்புகளை பற்றி அவர்கள் அறிந்து கொள்கிறார்கள். கிராமப்புறங்களில் நடைபெறும் நிகழ்வுகளிலும் கிராமப்புற பாடல் முக்கியத்துவத்தை பற்றி அறிந்து கொள்கிறார்கள்.படிக்கும் பாடப்பகுதியினை தமக்கு உரித்தான முறையில் அதனை வெளிப்படுத்தும் திறனை பெறுகிறார்கள்.

## கருதுகோள்கள்

மாணவர்கள் சினிமாவில் மட்டும் தான் ஆர்வமாக உள்ளார்கள் .நாட்டுப்புற நிகழ்வுகளில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. நாட்டுப்புற பாடல்கள் மற்றும் நாட்டுப்புற கதைகளை பற்றிய குறைந்தபட்ச புரிதல் கூட இல்லாமல் இருக்கிறார்கள். பாடப்பகுதியை மனப்பாட முறையில் கற்றுக் கொள்கிறார்கள். அன்றாட வாழ்க்கையோடு தொடர்பு படுத்திக் படிக்க முடியவில்லை.

மாணவர்களுடன் பாடும் திறன் குறைவாக உள்ளது.குறிப்பாக வில்லுப்பாட்டு என்ற கலையினை அவர்கள் அறிந்து இருக்க வில்லை . காடுகளை பற்றியும் காடுகளின் அவசியத்தை பற்றியும் காடுகளினால் மனிதன் பெரும் நன்மைகளைப் பற்றியும் அறிந்திருக்கவில்லை. வில்லுப்பாட்டு என்பது நமக்கு புரியாத பாடல் என்று எண்ணுகிறார்கள். சக மாணவனிடம் தனது திறமையை வெளிப்படுத்த பயத்துடன் காணப்படுகிறார்கள்.

## ஆய்வியல்

## ஆய்வு முறை

மாணவர்களிடம் தனித்திறன் மற்றும் பாடல்களை குறித்து வினாக்கள் அடங்கிய கேள்வித்தாளை முன் தேர்வாக நடத்தப்பட்டது. அதாவது கலைகளின் மீதான மாணவர்கள் ஆர்வம் எவ்வாறு உள்ளது கலைச்சிறனையும் பாடலையும் மாணவர்கள்

எவ்வாறு புரிந்து கொள்கிறார்கள். என்கிற வகையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது .இவ்வாய்வனது பரிசோதனை முறையில் தான் நடைபெற்றது.

## வடிவமைப்பு

ஆய்வானது மாணவர்களை ஒற்றை குழுக்களாக உருவாக்கி பரிசோதனைக்கு முன் பரிசோதனைக்கு பின்பு என்று இருவகையில் மாணவர்களுக்கு முன் தேர்வு மற்றும் பின் தேர்வு வைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வுக்கு உட்படும் மாணவர்கள்






அரசு மேல்நிலைப்பள்ளி, மேலாய்குடி ,

பரமக்குடி கல்வி மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டம்.

மொத்த மாணவர்கள் 24 .

10 ஆண் மாணவர்களும் 14 பெண் மாணவர்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

## செயல்பாடுகள்

## செயல்பாடு : 1

## உமக்கு பிடித்ததை செய்!!!



மாணவர்களை நான்கு குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுவினருக்கும் தங்கள் குழுவின் ஒத்துழைப்போடு ஒவ்வொருவரின் திறமையை வெளிப்படுத்துங்கள் என்று கூறப்பட்டது.

ஒவ்வொரு மாணவரும் பாடல்களை பாடியோ!!கதை சொல்லியோ மௌன நாடகம் மூலமாகவோ, பேச்சு திறமையின் மூலமாகவோ..தங்கள் திறமையை வெளிப்படுத்தினார்.



## செயல்பாடு : 2



**நான் சொல்லும் எழுத்தில் நீ பாடு!!.**

நான்கு குழுவில் இரண்டு குழுவினருக்கான போட்டியாக இது அமைந்தது. ஒரு குழுவினர் பாடலின் முதல் எழுத்தைச் சொல்ல இரண்டாவது குழுவினர் அவ் எழுத்தில் தொடங்கும் பாடலை பாடுவார்கள் முடிவில் யார் அதிகமான பாடல்களை, சரியாக பாடினார்களோ அக்குழு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது .



## செயல்பாடு : 3

மாணவர்களை நான்கு குழுக்களாக பிரித்து நாட்டுப்புற பாடலை பற்றி கேள்விகள் கேட்கப்பட்டன.



அவர்களுக்கு தெரிந்த, கேட்ட நாட்டுப்புறப் பாடல்கள் பாட அழைக்கப்பட்டன.



## செயல்பாடு : 4

ஒவ்வொரு குழுவினருக்கும், பாடலுக்கான கருப்பொருளை வழங்கி வில்லுப்பாட்டு மூலமாக பாடல் பாட அழைக்கப்பட்டனர்.





## செயல்பாடு : 5

வில்லுப்பாட்டுக்கான பொருட்களை செய்து வில்லுப்பாட்டு பாடல்.







ஒவ்வொரு குழுவினரும் பாடலுக்கான கருப்பொருளை எடுத்துக்கொண்டு வில்லுப்பாட்டிற்கான கருவிகளை செய்து பாடல் பாடும் திறனை பெற்றனர்.

## ஆய்வின் பகுப்பாய்வு


## மதிப்பெண் பட்டியல்

அரசு மேல்நிலைப்பள்ளி மேலாய்குடி

### மதிப்பெண் பட்டியல் - முன்தேர்வு மற்றும் பின்தேர்வுக்கான விபரம்

| வ.எண். | மாணவர் பெயர் | மதிப்பெண் விபரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | முன்தேர்வு | | பின்தேர்வு | |
| | | 20 | 100 | 20 | 100 |
| 1 | E. ராஜாராம் | 12 | 60 | 14 | 70 |
| 2 | முகமது ரஹீம் | 17 | 85 | 20 | 100 |
| 3 | ரோஜா ஸ்ரீ | 14 | 70 | 19 | 95 |
| 4 | முத்தமரியம்மாள் | 13 | 65 | 15 | 75 |
| 5 | பிரபா | 8 | 40 | 12 | 60 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | அருணா | 19 | 95 | 18 | 90 |
| 7 | மாறன் | 16 | 80 | 18 | 90 |
| 8 | சத்தியபிரியா | 14 | 70 | 20 | 84 |
| 9 | அமலேஷ் | 10 | 50 | 15 | 75 |
| 10 | அருண்குமார் | 12 | 60 | 19 | 95 |
| 11. | பாண்டியராஜன் | 11 | 55 | 18 | 90 |
| 12. | கருப்பசாமி | 17 | 85 | 19 | 95 |
| 13 | துர்கா | 13 | 65 | 20 | 100 |
| 14 | முனியசாமி | 9 | 45 | 18 | 90 |
| 15 | K.மெய்யப்பன் | 7 | 35 | 17 | 85 |
| 16 | எ.ராகுல் | 10 | 50 | 15 | 75 |
| 17 | மா.ரோஜா | 4 | 20 | 13 | 65 |
| 18 | ரா.யோகேஷ்வரன் | 13 | 65 | 13 | 65 |
| 19 | ச.மாலதி | 15 | 75 | 18 | 90 |
| 20 | பா.கீர்த்திகா | 9 | 45 | 18 | 90 |
| 21 | நா.கவிபிரியா | 8 | 40 | 13 | 65 |
| 22 | த.இனியன் | 13 | 65 | 15 | 75 |
| 23 | ரா.மணிமாறன் | 4 | 20 | 17 | 85 |
| 24 | மா.சுபா | 12 | 60 | 15 | 75 |
| | மொத்தம் | | 1400 | | 1979 |




**மாணவர்கள் தேர்வுகளின் மதிபெண்கள்**

மதிப்பெண் சராசரி (Mean)

முன்தேர்வின் சராசரி = $\dfrac{\text{முன்தேர்வின் மொத்த மதிப்பெண்}}{\text{மொத்த மாணவர்கள்}}$

$= \dfrac{1400}{24}$

$= 58.33\%$

பின்தேர்வின் சராசரி = $\dfrac{\text{பின்தேர்வின் மொத்த மதிப்பெண்}}{\text{மொத்த மாணவர்கள்}}$

$= \dfrac{1979}{24}$


$= 82.45\%$

மதிப்பெண் சராசரியின் விபரம்

| | சராசரி |
|---|---|
| முன்தேர்வு | 58.33 % |
| பின்தேர்வு | 82.45 % |

மதிப்பெண் சராசரி விபரங்களின் அடிப்படையில் பின்தேர்வின் சராசரி 82.45% ஆனது முன்தேர்வின் சராசரி 58.33% அதிகமாக இருந்ததை கண்டறியமுடிந்தது.

சோதனைகளின் சராசரி வரைபடம்



## இடைநிலை (Median)

## இடைநிலை மதிப்பெண்கள் விபரம்

முன்தேர்வு மதிப்பெண்கள்

60,85,70,65,40,95,80,70,50,60,55,85,65,45,35,50,20,75,45,40,65,20,60

ஏறுவரிசையின் மதிப்பெண்கள்

20,20,35,40,40,45,45,50,50,55,60,60,60,65,65,65,65,70,7075,80,85,85,95

முன்தேர்வின் இடைநிலை = 65

## பின்தேர்வின் மதிப்பெண்கள்

இடைநிலை


70,100,95,75,60,90,84,75,95,90,95,100,90,85,75,65,90.90.65,75,85,75,85,75

ஏறுவரிசையின் மதிப்பெண்கள்

60,65,65,70,75,75,75,75,75,84,85,85,90,90,90,90,90,90,95,95,95,100,100

பின் தேர்வின் இடைநிலை மதிப்பெண் = 85

## இடைநிலை தேர்வுகளின் வரைபடம்




முகடு

முன்தேர்வின் மதிப்பெண் முகடு

= 20,20,35,40,40,45,45,50,50,55,60,60,60,65,65,65,65,70,7075,80,85,85,95

= 65

பின்தேர்வின் மதிப்பெண் முகடு


=60,65,65,70,75,75,75,75,75,84,85,85,90,90,90,90,90,90,95,95,95,100,100

= 90

## தேர்வுகளின் மதிப்பெண்களின் முகடுகளின் விபரம்

| தேர்வுகளின் முகடு | முகடு மதிப்பெண் |
|---|---|
| முன்தேர்வு | 65 |
| பின்தேர்வு | 90 |

## முன்தேர்வு, பின்தேர்வ சோதனைகளின் முகடின் வரைபடம்




அரசு மேல்நிலைப்பள்ளி மேலாய்குடியில் கிராமப்புற மாணவர்கள் அதிகமான பேர் பயின்று வருகிறார்கள் .கிராமிய கலைகளைப் பற்றியும் கிராமிய கதைகளை பற்றியும் நன்கு அறிவார்கள். ஆனால் அவர்களிடம் ஆர்வம் குறைவாக இருந்ததை பார்க்க முடிந்தது .தற்பொழுது நடைமுறைச் சூழலில் சினிமாவின் மோகங்கள் குழந்தைகளின் பால் பெரிய கவனத்தை பெறுகிறது அவ்வாறு இருக்கையில் பாடத்தை அவர்கள் எவ்வகையில் கற்கிறார்கள்.

பாட நூற்களை கற்பது ஆர்வம் எவ்வாறு ஏற்படுகிறது என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு நாட்டுப்புற பாடல்களின் மூலமாக கடந்த காலங்களில் நடைபெற்ற விழுமிய கற்பித்தல் தற்பொழுது குறைந்து வருவதை நன்கு உணர முடிந்தது.

மாணவர்களுக்கு விழுமியங்களை கற்றுக் கொடுக்க முற்படும் போதும் எந்த வகையை நாம் நினைவு படுத்த வேண்டும் என்ற சிந்தனை பிறக்கிறது.

மாணவர்களிடம் ஆய்வுக்கு முந்தைய முன் தேர்வில் அவர்கள் கூச்சம், பயம் , போன்ற பேசும் திறனில் ஆர்வம் குறைவாக காணப்பட்டார்கள்.

சில ஆர்வமூட்டல்களும் பின்னூட்டமும் வழங்கிய பொழுது ஒவ்வொருவரும் ஒவ்வொரு செயல்பாடுகளில் சிறப்பாக முன்னே வந்து நாட்டுப்புறப் பாடல்களை வடிவமைப்பதிலும், வரிகளை எழுதுவதிலும், பின்னூட்டும் வழங்குவதில் கூட சிறப்பாக தேர்ச்சி பெற்றதை காண முடிந்தது. மாணவர்களின் தனித்திறமையோடு கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை இணைக்கப்படும் பொழுது அது முழுமையாக மாணவர்களை சென்றடைவதை காண முடிந்தது.

தெரிந்ததிலிருந்து தெரியாதற்கு கற்றல் கற்பித்தல் நிகழும் பொழுது மாணவர்கள் எளிமையாகவே கற்றுக் கொள்கிறார்கள். குறிப்பாக காடுகள் வளர்ப்பு பற்றி ஒரு கருப்பொருளை பாடல் அமைப்பதற்கு வழங்கிய பொழுது எண்ணற்ற மாணவர்கள் காடுகளை குறித்து விரிவான விளக்கங்களையும், பாடலுக்கான வரிகளை எழுதியதை பார்க்க முடிந்தது.

நன்னெறிகளை போதிக்கும் விழுமிய கற்றலுக்கான ஒரு கற்பித்தல் பாடவேளை சிறப்பாக அமைந்தால் மாணவரிடம் சில நினைவூட்டல்களை செயல்பாடுகளின் மூலமாக கற்பிக்கப்படும் பொழுது எண்ணற்ற விவரங்களை அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள் என்பதனை இந்த ஆய்வு நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

## ஆய்வின் முடிவுகள்

மாணவர்கள் பாட நூல்களை கற்பதை காட்டிலும் கலைத்திறன்களை கற்பதில் மிகவும் ஆர்வத்துடன் காணப்பட்டனர் பல்வேறு திறன்களை தன்னகத்திலே வைத்திருந்தவர்கள் வெளிப்படுத்தும் திறனை அறியா வண்ணம் இருந்தார்கள் பயம் , சோகம் போன்றவை காணப்பட்டது ஆய்வுக்குப் பின்பு தமது திறமைகளை வெளிப்படுத்த மிகவும் ஆர்வத்தோடு அனைவரும் பங்கு பெற்றார்கள்.

முன்னறித் தேர்வில் மாணவருடைய அடைவு நிலை பின்னறி தேர்வின் மாணவனை அடைவு நிலையை ஒப்பிடும் பொழுது பல்வேறு மாற்றங்களை காண முடிந்தது மானுடைய செயல்பாடுகள் திறன்கள் மேலோங்கி இருந்ததையும் நாட்டுப்புறப் பாடல்களில் உள்ள செயல்பாடுகளில் மிகவும் ஆர்வத்தோடு கலந்து கொண்டார்கள்.

தனக்கான திறமையை அடையாளம் கண்டறிய மிகவும் ஆவல் கொண்டு இருந்தார்கள்.

மாணவர்கள் பள்ளி இணைச் செயல்பாடுகளை மிகவும் ஆர்வத்தோடு செயல்படுகிறார்கள்.

கற்றல் கற்பித்தல் நிகழ்வுகள் அவர்களுக்கு பிடித்தமான செயல்பாடுகளுடன் இணைந்து நடைபெறமானல் முழு மனதோடு பங்கேற்க செய்தனர்.

ஒவ்வொரு பாடத்தையும் அவர்களின் திறமையோடு இணைத்து படிக்க செய்கின்றனர்.

இந்த ஆய்வின் நிறைவில் மாணவர்கள் நாட்டுப்புற கலைகளையும், நாட்டுப்புறப் பாடல்களையும் கிராமப்புறங்களில் அவை எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதனை நன்கு அறிந்து கொள்கிறார்கள்.

ஒவ்வொரு மாணவரும் பாடல் பாடும் திறனை வளர்த்துக் கொண்டனர்.

எந்த ஒரு நிகழ்வை கண்டாலும் அவர்கள் அவர்களுக்கு தெரிந்த வார்த்தைகளில் பாடல் வழியாக அமைத்து நாட்டுப்புற பாடலைப் பாடும் திறனை வளர்த்துக் கொண்டார்கள்.

காடுகளின் அவசியத்தையும் காடுகளின் முக்கியத்துவத்தை பற்றி அறிந்து கொண்டார்கள் மழைகளை பற்றியும் மழை நீரின் அவசியத்தை பற்றியும் நன்கு தெரிந்து கொண்டார்கள்.

நாட்டுப்புற பாடலுக்கும் மற்ற பாடலுக்கும் உள்ள வேறுபாடு அறிந்து கொண்டனர். கிராமப்புறங்களில் இயல்பாகவே அனைவருக்கும் பாடல்களைப் பற்றி அறிந்து இருந்ததை தெரிந்து கொண்டார்கள்.

தமது திறமைகளை நல்லதொரு வாய்ப்பு அமைவுகிற தருவாயில் கண்டிப்பாக வெளிப்படுத்துவோம் என்கிற ஒரு தன்னம்பிக்கையோடு இருந்தார்கள்.

சக மாணவர்களோடு குழுக்களாக இணைந்து பல்வேறு திறன்களை பெற்றனர்.

குழுவின் வெற்றியே தனது வெற்றி என்று எண்ணுகிற வகையில் அவருடைய செயல்பாடு இருந்தது.

## கல்வியியல் பயன்பாடு

மாணவர்களின் தனித்திறமை வெளிப்படுத்து வண்ணம் பாட நூல்களில் அதற்கான வாய்ப்புகள் வழங்க வேண்டும் .தற்பொழுது கலைத்திருவிழா ,கலையருவி திருவிழா, விளையாட்டு போட்டிகளை போல ஒவ்வொரு திறமையும் மாணவர்கள் பாட இன செயல்பாடுடன் வெளிப்படுத்தும் வண்ணம் வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் பாடம் நடத்துவதற்கு முன்பாக ஒவ்வொரு மாணவரின் தனித்திறமையை ஒவ்வொரு நாளும் வெளிப்படுத்துகிற வகையில் வகுப்பறை யுத்தியை கையாள வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களின் தனித்திறமையை அடையாளம் கண்டு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.அவர்களுக்கான வாய்ப்புகள் எங்கெங்கே என்னென்ன உள்ளது என்பதனை அறிந்து அவர்களுக்கு நல்ல ஆலோசனை வழங்க வேண்டும்.

## பரிந்துரைகள்

ஆசிரியர்கள் மாணவர்களின் தனித்திறமையை அடையாளம் காண வேண்டும். ஒவ்வொரு மாணவரின் திறமைக்கு ஏற்ப அவர்களை அவருடைய வாய்ப்புகளை வழங்க வேண்டும் .பள்ளியில் படிக்கும் காலங்களில் மாணவர்களின் தனித்திறமை வெளிப்படுத்தும் வகையில் வாய்ப்புள்ள போட்டிகளில் ஆசிரியர்கள் பங்கேற்க செய்ய வேண்டும்.

பாடவேளை தொடங்கு முன்பு மாணவர்களின் தனித்திறமைகளை கண்டு ,உற்சாகமூட்டும் வார்த்தைகளை வழங்க வேண்டும் .பாட இன செயல்பாடுடன் மாணவர்களை மனதில் பிடித்த செயல்பாடு இணைத்து கற்பித்த நிகழ்வை திட்டமிட வேண்டும்.

நாட்டுப்புற கலைகளை பற்றியும் நாட்டுப்புறப் பாடல்களை பற்றியும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மாணவர்களுக்கு விளையாட்டு பாட வேளையில் விளையாட்டு செயல்களை செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

நமது பாடநூலினில் மாணவர்களின் தனித்திறமைகளை வெளிப்படுத்தும் வண்ணம் பாடப்பகுதியிலே செயல் குறிப்புகள் எடுக்கப்பட வேண்டும்.

மாணவர்களுக்கு விழுமிய கருத்துக்களை அவர்களுக்கு பிடித்த செயல்பாடுளுடன் இணைத்து கொண்டு செல்ல திட்டமிட வேண்டும். ஒவ்வொரு நிகழ்விலும் அனைத்து மாணவர்களையும் பங்குபெறும் வகையில் பள்ளி வகுப்பறை செயல்பாடுகள் இருக்க வேண்டும்.